1996 ஆகஸ்ட் 20]

கங்காபுரம் மின்மோட்டாரை மாற்றுவதற்கான பணி ரூ. 14.51 செலவில் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. வாவிக்கடை நீர் உந்து நிலையத்திலும் ரூ. 14.88 லட்சங்கள் செலவில் மின் மோட்டார் மாற்றும் வேலைக்கான உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

18--

பழுதடைந்த தெரு விளக்குகளை சீர்செய்தல்

வினா எண் 437--**திரு. ப. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை தொகுதி, மதுக்கூர் ஒன்றியம் காசாங்காடு கிராமத்தில் தெரு விளக்குகள் பழுதடைந்துள்ளதைச் செப்பனிட அரசு துரித நடவடிக்கை எடுக்குமா?

விடை:

மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த காசாங்காடு ஊராட்சியில் 255 குழல் விளக்குகளும், 2 பாதரச ஆவி விளக்குகளும் ஆக 257 தெருவிளக்குகள் உள்ளன. எரியாமல் உள்ள தெருவிளக்குகளுக்கு உதிரி பாகங்கள் மாற்றம் செய்யப்பட்டு எரியவிடப்பட்டு வருகிறது. இப்பகுதி குறைந்த மின் அழுத்தம் உள்ள பகுதியாகும். இருப்பினும் தொடர்ந்து மின் விளக்குகள் எரிய தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

19--

கோயம்புத்தூரில் பில்லூர் குடிநீர் குழாய்கள் பதித்தல்

வினா எண் 855--**திரு. வி. கே. லட்சுமணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கோயம்புத்தூர் நகரில் பில்லூர் குடிநீர் குழாய்கள் பதிக்கும் பணியை விரைவுபடுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் நகரில் பில்லூர் குடிநீர் குழாய்கள் பதிக்கும் பணியில் மொத்தமுள்ள 291.65 கி.மீ. நீள பகிர்மானக் குழாய் மற்றும் பிரிவுக்குழாய் பதிக்கும் பணியில் 70 கி.மீ. நீள பணிக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு அதில் 26 கி.மீ. நீளத்திற்கு குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 44 கி.மீ. நீள குழாய் பதிக்கும் பணியை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

20--

குடியிருப்போருக்கு வீடுகளைச் சொந்தமாக்குதல்

வினா எண் 1438--**திரு. கே. சுப்பராயன்**: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருப்பூர் தென்னம்பாளையம் காலனியிலுள்ள நகராட்சிக்குச் சொந்தமான 140 வீடுகளை தற்போது குடியிருப்போருக்கே சொந்தமாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை--

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): திருப்பூர் தென்னம்பாளையம் காலனியிலுள்ள நகராட்சிக்குச் சொந்தமான 140 வீடுகளை தற்போது குடியிருப்போருக்கே சொந்தமாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS